**<u>தலைப்பு 243 – அபிவிருத்தி நிதி திணைக்களம்</u>**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 243 – அபிவிருத்த நிதி திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 10 விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு போதியதாக இல்லாததனால் மொத்தமாக ரூபா 6,789,112,090 தொகை அதாவது 2 சதவீத்திலிருந்து 257 சதவீதம் வரையான வீச்சில் நி.பி 66/69 இன் கீழான மாற்றங்களின் மூலம் நிதி ஏற்பாடு அதிகரிக்கப்பட்டிருந்து. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீட்டினைத் சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 14 செலவின விடயங்களின் ஆரம்ப மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தாமையின் காரணமாக மொத்தமாக ரூபா 6,874,992,990 தொகை அதாவது 3 சதவீத்திலிருந்து 51 சதவீதம் வரையான வீச்சில் நி.பி 66/69 இன் மூலம் நிதி ஏற்பாடு குறைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 243-1-1-45-1501-11 ஆம் இலக்க செலவு விடயமானது வருமானம் குறைந்த மக்களுக்கான உணவுப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் செலவின விடய இலக்கம் 243-1-1-51-1504-11 சிறு போகத்திற்காக அரச வங்கியின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆலை உரிமையாளர்களுக்கு மடபண கடன் வழங்குவதற்கான வட்டி நிவாரணம் அரச வங்கிக்க செலுத்துவதற்கு மீளாய்வாண்டின் போது ஆரம்ப மதிப்பீட்டு நிதியேற்பாடு மேற்கொள்ளாது நிதிப்பிரமாணத்தின் ஊடாக ரூபா 84,756,000 இனால் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>2023 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஆண்டின் இறுதி அரையாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட காரணத்தால் மதிப்பீடுகளை தயாரிக்கும் போது உள்ளடக்கப்படவில்லை. | -மேற்படி- |
| (ஈ) | திறைசேரிச் செயலாளரின் 2023 சனவரி 27 ஆந் திகதிய 01/2023 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் 02(அ) பந்தியின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு நீங்கலாக ஏனைய அனைத்து மீண்டெழும் செலவினங்களுக்கான நிதியேற்பாடுகளின் கூட்டுத்தொகை 06 சதவீதத்திற்கு சமனான நிதியேற்பாடு ஆகக் குறைந்தது பதிவழிக்கப்பட வேண்டிய போதிலும், 5.38 சதவீதம் பதிவழிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (உ) | 05 செலவின விடயங்கள் தொடர்பில் 2023 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 50,168,500,000 தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடும் பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் நடன் மறுசீரமைப்ப நடவடிக்கைகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படுகின்றமை யால், ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பணம் விடுவிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீட்டினைத் சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக 13 செலவின விடயங்களுக்காக 2023 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 1,666,861,200 தொகையான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 1,089,437,365 பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்தது. அது அந்த செலவின விடயத்தின் மொத்த தேறிய நிதியேற்பாட்டின் 50 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான கருத்திற்கொள்ளக்கூடிய வீச்சில் காணப்பட்டது. | எதிர்பார்த்தவாறு வட்டி நிவாரண விண்ணப்பங்கள் பங்குபற்றிய நிதி நிறுவனங்களின் மூலம் உரிய காலப்பகுதியினுள் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாமை. | -மேற்படி- |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தாபனவிதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 14:11 ஆம் பிரிவின் பிரகாரம், 23 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இடர் கடன் வழங்கும் போது ஓய்வூதிய சம்பள பரிமாற்றம் மேற்கொள்ளும் போது வழங்கப்படும் இரத்து செய்ய முடியாத உறுதிமொழி கூற்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டினுள் 19 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,469,440 தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளும் போது மேற்படி கூற்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கடன் தொகையை நூறு தவணைகளில் திரும்பப் பெற, எதிர்கால சேவைக் காலம் இல்லாத உத்தியோகத்தர்களிடமிருந்து மட்டுமே மேற்கண்ட அறிக்கையைப் பெற்றுள்ளதுடன், எதிர்காலத்தில் அனைத்து உத்தியோகத்தர்களிடமிருந்தும் மேற்கண்ட அறிக்கையைப் பெற நான் குறித்து வைத்துக்கொள்கின்றேன். | தாபனவிதிக் கோவையின் தொடர்புடைய பிரிவுகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| அரச நிறுவனங்களுக்கு அரச இலத்திரனியல் பெறுகைகள் கட்டமைப்பினை அறிமுகப்படுத்தல் தொடர்பிலான 2018 ஒக்தோபர் 23 ஆந் திகதிய 05/2018 மற்றும் 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய 08/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச பெறுகைகள் நிறுவனத்தின் பதிவு, இணைப்பு உத்தியோகத்தர்களின் பதிவு, வழங்குநர்களின் பதிவு, வருடாந்த பெறுகைகள் திட்டம் சமர்ப்பிப்பு, பெறுகை அறிவிப்பு வெளியீடு, விலை ஒப்பீட்டு முறை ஆகியவற்றுக்கு அரசு நிறுவனங்கள் இலத்திரனியல் பெறுகை முறையைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தபோதிலும், திணைக்களத்தினால் மேற்படி சுற்றறிக்கையின்படி செயற்படாது 2023 ஆம் ஆண்டில் 06 சந்தர்ப்பங்களில் மொத்தமாக ரூபா 1,584,599 பெறுமதியான பெறுகை உருப்படிகள் விலை ஒப்பீட்டு முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | அரச இலத்திரனியல் பெறுகைகள் கட்டமைப்பிற்காக பயிற்றுவித்தல் 2023 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இடம்பெற்ற காரணத்தால் 2023 ஆம் ஆண்டின் போது அந்த கட்டமைப்பின் மூலம் பெறுகை நடவடிக்கை மேற்கொள்ள முடியாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவ

### 4.1 இணைத்துக்கொள்ளப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட 59 பதவிகளின் 10 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. அவற்றுள் சிரேஷ்ட மட்டத்திலான 05 பதவிகளும், இரண்டாம் நிலையிலான 02 பதவிகளும் ஆரம்ப மட்டத்திலான 03 பதவிகளுமாக காணப்பட்டது. | இரண்டாம் நிலை மட்டத்திலான இரு வெறிறிடங்களில் ஒன்று நிரப்பப்பட்டுள்ளதுடன், ஆரம்ப மட்டத்திலான மூன்று வெற்றிடங்களில் இரண்டு வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. நிலவும் ஒரு சாரதி வெற்றிடத்திற்காக கடிதமொன்று வெளியிடப்பட்டு அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. சிரேஷ்ட மட்டத்திலான வெற்றிடங்கள் தொடர்பில் உரிய பிரிவுகள் மீண்டுமொருமுறை அறிவித்து அந்த வெற்றிடத்தை இயலுமான அளவு நிரப்புவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். | முறைப்படியாக நடவடிக்கை எடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |